## 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

## அ.வ.எண்.428/2016

10.11.2021 -வா.சா.1-திரு.சிவன் பாண்டி

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலப்பாளையம் சர்வே எண்.84/1ஏ-ல் உள்ள 4.36 செண்டை பொறுத்து மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.84/1ஏ-ன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 71 செண்ட் என்றால் சரிதான். நான் கோரியுள்ள 4.36 சென்ட் எனது தந்தைக்கு கிரையம் மூலமும், எனக்கு பாகப்பிரிவினையில் 7-பிளாட்கள் கிடைத்தது. அந்த 7 பிளாட்களில் ஒரு பிளாட்டை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை பொறுத்து இடைஞ்சல் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்தை எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் என நான் குறிப்பிட்டுள்ள சங்கதி தவறானது என்றால் சரிதான். தபசில் சொத்து மற்றும் 1 ஏக்கர் 71 செண்ட் முழுவதும் பட்டா எண்.123 மூலம் பிரதிவாதிகள் பெயரில் நாளது தேதியில் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், நாளது தேதி வரை மொத்தசொத்திற்கும் பட்டா பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பெயரை பட்டாவிலிருந்து நீக்கம் செய்ய நான் பாளையங்கோட்டை வட்டாட்சியரிடம் மனு செய்தேனா என்றால் செய்தேன். அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் தரப்பில் கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கோட்டாட்சி தலைவர் பிரதிவாதிகளின் மேல்முறையீட்டை அனுமதித்தார் என்றால் சரிதான். அதை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் மேல்முறையீடு செய்தேன். கோட்டாட்சி தலைவர் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. கோட்டாட்சி தலைவர் உத்தரவை எதிர்த்து 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவை ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் தபசில் சொத்தை பொறுத்து நாளது தேதியில் பட்டா பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால்

சரியல்ல. பிரதிவாதிகள் தபசில் சொத்தில் தங்களுக்கு எவ்வாறு உரிமை உள்ளது என கட்சி செய்கிறார்கள் என்றால் தனது மூதாதையர் செய்கு முகம்மது தரகனாருக்கு கிரையம் ஏற்பட்டதாக கட்சி செய்கிறார்கள். நீதிமன்ற ஏல நடவடிக்கையில் செய்கு முகம்மது தரகனாரின் சொத்து ஏலத்திற்கு போய்விட்டதால் அவருக்கு உரிமை இல்லை. ஆதியில் சொத்து சுக்கன் செய்யது முகம்மதுக்கு பாத்தியப்பட்டது. அவர் 09.05.1927ல் 1ம் பிரதிவாதியின் தந்தையின் தந்தைக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். ஏலம் மூலம் கிடைத்ததாக சொல்லும் சொத்து நான் வாழ்விப்பு பெற்றேனா என்றால் நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு பெற்றேன். நீதிமன்றம் மூலம் எனது மூதாதையர் வாழ்விப்பு பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த வாழ்விப்பின் மூலம் எனது மூதாதையர்களுக்கு தபசில் சொத்தின் உரிமை மாறவில்லை என்றால் சரியல்ல. வாழ்விப்பின் அடிப்படையில் எனது மூதாதையர்கள் சொத்தை அனுபவித்ததே இல்லை என்றால் சரியல்ல.பிராதில் வாழ்விப்பு எடுத்ததற்கு ஆதாரம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வாழ்விப்பே எடுக்காத காரணத்தால் தான் அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1990ல் 1ம் பிரதிவாதி சொத்தை பொறுத்து ஒரு அடமானம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். அவர் பெயருக்கு அனுபவம் உரிமையும் இருந்ததால் தான் அடமானம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண்.428/2016**

01.12.2021 -வா.சா.1-திரு.சிவன்பாண்டி

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது முன்னோர்கள் 1 ஏக்கர் 71 சென்ட் சொத்தை வாழ்விப்பு எடுத்தது சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதற்கு பட்டா எண்.123 பெற்றுள்ளோம். அந்த பட்டா பிரதிவாதிகள் குடும்பத்திற்கு சொந்தமானது என்றால் சரியல்ல. பட்டா எண்.123ல் தவறுதலாக பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட்டதால் அதை ரத்து செய்ய நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். பட்டா எண்.123 பிரதிவாதிகள் பெயரில் தான் ஆரம்பத்தில் இருந்தது. பொதுவாக ஒருவரது அனுபவத்தில் உள்ள சொத்தை தான் அடமானம் வைக்க முடியும் என்றால் அடமானம் சொத்தின் மீது எந்த உரிமையும் ஏற்படுத்தாது. பிரதிவாதி பெயரில் தபசில் சொத்தின் உரிமை அனுபவம் இருந்ததால் தான் அவர் அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தபசில் சொத்தை வாழ்விப்பு எடுத்ததற்கான ஆவணம், அ.வ.எண்.250/38 வழக்கின் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்டள்ள வழக்கு பதிவேட்டு நகலில் கண்ட சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. அது சம்பந்தம் இல்லாத ஆவணம் என்பதால் தான் அதை நாங்கள் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணத்தை நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முன்னோர்கள் சொத்தை வாழ்விப்பு எடுத்ததற்கான ஆதாரம் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது போல் வாழ்விப்பு எடுக்காததால் தான் அந்த

ஆவணத்தை தாக்கல் செய்யவோ, குறியீடு செய்யவோ இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கு நகர ஊரமைப்பு அலுவலகத்திடம் பெற்ற அனுமதி நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அனுமதி பெறாததால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.123 தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகம் முதல் உயர்நீதிமன்றம் வரை தாவா நடைபெற்றது என்றும், அதில் 1ம் பிரதிவாதிகளுக்கு அனுகுலமாக தீர்வானது என்றும் சொன்னால் ஆவணங்களை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தீர்வு காணுமாறு முடிவு செய்யப்பட்டது. பட்டா எண்.123 இன்று வரை 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றும், அதை நீக்கரவு செய்தது தவறு என்று தான் உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கும், எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் இதுவரை எங்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வழங்கப்பட்ட பட்டா எண்.55 ஆகும். வா.சா.ஆ.10 டவுண் சர்வே பதிவேட்டில் 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் 5 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நில உச்சவரம்பு சட்டத்தின் படி 1ம் பிரதிவாதியின் தந்தை மற்றும் அவரது சகோதரரிடம் இருந்து தான் 1 ஏக்கர் 71 சென்ட் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. செய்யது ஏ.ஹெச். அகமது அலி என்பவரிடமிருந்து எடுக்கப்பட்டது. நான் அகமது அலியிடமிருந்து எடுக்கப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும், எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தும் திறந்த வெளியில் தான் உள்ளது என்றால் சரிதான். அதில் யாரும் உள்ளே நுழைய முடியும் என்றால் சரிதான். அதில் அடைப்பு இல்லை. 01.11.2016ல் பிரதிவாதி 4.36 சென்ட் உள்ள இடத்தில் இடைஞ்சல் செய்தார். 1 ஏக்கர் 71

சென்ட் விஸ்தீரணத்தில் 4.36 சென்டை மட்டும் இடைஞ்சல் செய்தார். 4.36 சென்டில் ஜே.சி.பி மூலம் தொண்டியதாக பிராதிலும், இடைக்கால மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இடைஞ்சல் செய்ததாக சொல்லியுள்ளோம். நான் சொல்வது போல் பிரதிவாதி எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்ய அவசியம் இல்லை என்றும், ஏனெனில் சொத்தே அவருடையது தான் என்றும் சொன்னால் சரியல்ல. உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு தான் எங்கள் பெயரில் பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்னதாகவே வாங்கிவிட்டோம். உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு அதை மறைத்து,. ஏமாற்றி எங்கள் பெயரில் பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது முன்னோர்கள் வாழ்விப்பு எடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு வாழவிப்பு எடுத்ததாக சொல்லும் காலத்திற்கு 12 ஆண்டுக்குள் சுவாதீனம் பெறாததால் அந்த தீர்ப்பின் படி எங்களுக்கு சொத்து சொந்தம் என்று சொல்வது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தின் உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாழ்விப்பு எடுத்ததை நிரூபிக்காததாலும் தபசில் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் வேறு சொத்துக்களின் ஆவணத்தை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிராது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும், பிராதை தள்ளுபடி செய்ய தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.